செ.வெ.எண் : 26/ மார்ச் நாள் : 13.03.2021

**இராமநாதபுரம் மாவட்டம்**

**வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு முதற்கட்ட தேர்தல் பயிற்சி**

**மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர்**
**திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு**

இராமநாதபுரம் இன்பான்ட் ஜீசஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் இன்று (13.03.2021), தேர்தல் பணியில் ஈடுபடும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு நடைபெற்ற முதற்கட்ட பயிற்சியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., நேரில் சென்று பார்வையிட்டார்.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்-2021 நாள் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து மாவட்டத்தில் அமைதியான முறையில் தேர்தல் வாக்குப்பதிவு நடத்துவதற்கான அனைத்து முன்னேற்பாடு நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, மாவட்டத்திலுள்ள 4 சட்டமன்ற தொகுதிகளில் மொத்தம் 1647 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு வாக்குச்சாவடி மையங்களிலும் சாய்வுதள வசதி, குடிநீர் வசதி, கழிப்பறை வசதி உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் உறுதி செய்யப்பட்டுள்ளன. வாக்குப்பதிவு நாளன்று தேர்தல் பணியில் ஈடுபடுவதற்காக பரமக்குடி சட்டமன்ற தொகுதியில் 1,703 வாக்குச்சாவடி அலுவலர்களும், திருவாடானை சட்டமன்ற தொகுதியில் 1,444 வாக்குச்சாவடி அலுவலர்களும், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதியில் 2,603 வாக்குச்சாவடி அலுவலர்களும், முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதியில் 2,155 வாக்குச்சாவடி அலுவலர்களும் என மொத்தம் 7,905 வாக்குச்சாவடி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வலுவலர்களுக்கு முதற்கட்ட தேர்தல் பயிற்சி, பரமக்குடி தொகுதிக்கு பரமக்குடி ஆயிர வைசிய மேல்நிலைப்பள்ளியிலும், திருவடனை தொகுதிக்கு சி.கே.மங்கலம் பள்ளியிலும், இராமநாதபுரம் தொகுதிக்கு இராமநாதபுரம் இன்பண்ட ஜீசஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியிலும், முதுகுளத்தூர் தொகுதிக்கு கமுதி சத்ரிய நாடார் மேல்நிலைப்பள்ளியிலும் இன்றைய தினம் மதற்கட்ட பயிற்சி வழங்கப்படுகிறது. குறிப்பாக, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை கையாளும் முறை, வாக்குச்சாவடி நடைமுறைகள், வாக்குச்சாவடி அலுவலர்களின் பொறுப்புகள், வாக்குப்பதிவு நாளன்று வாக்குப்பதிவு துவங்கும் முன் வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் செயல்பாடு குறித்து உறுதிபடுத்திடும் விதமாக மாதிரி வாக்குப்பதிவு நடத்தி சான்றொப்பம் இடுதல் உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

அந்தவகையில், இராமநாதபுரம் இன்பான்ட் ஜீசஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதற்கட்ட பயிற்சியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., நேரில் சென்று பார்வையிட்டார். இதன் தொடர்ச்சியாக தேர்தல் பணியில் ஈடுபடும் ஆலவர்களுக்கு மேலும் இரண்டு கட்டங்கள் என மொத்தம் மூன்று கட்ட பயிற்சிகள் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின் போது, உதவி இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்/சார் ஆட்சியர் டாக்டர்.ன்.ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப., மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.சாமி.சத்தியமூர்த்தி ஆகியோர் உடனிருந்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**